பள்ளி நிலைகளுக்கு அப்பாலும் தம்முடைய மொழியிலே எழுதுதற்கு ஊக்குவிக்கின்றது (அஞ்சல்கள், நாட்குறிப்பு, மின்னஞ்சல்கள்) என்பதை இனங்காணுதல் இன்றியமையாததாகும்.

### உ) எழுதும்போது பயன்படுத்தக்கூடிய ஆலோசனைகள்

தேவைப்படும் நிறைவுப் பலன் பற்றி மட்டுமே மாணவர்கள் சிந்திப்பார்களேயானால், அவர்களுட் பலர் தாம் பதட்டமாக உணரக்கூடும். எனவே அதற்கு நிகராக செயற்பாட்டொழுங்கில் கவனம் செலுத்துதல் பயனுள்ளதாகும். ஓர் எழுத்துச் செயற்பாட்டொழுங்கினை நடத்தக்கூடிய படிமுறைகளாக எவ்வாறு சிறு பகுதிகளாக பிரிப்பது பற்றியும் அவற்றை எவ்வாறு அளவையியல் தொடரில் தீர்த்துவைத்தல் பற்றியுமான மதிநுட்பங்களை மாணவர்கள் கற்கவேண்டும். இன்றியமையாத படிமுறைகளில் சில: கருத்துகளை அறிதல், முன்பெற்ற அறிவினைச் செயற்படுத்தல் – எழுத்துருக் கட்டமைப்பைத் திட்டமிடலும் அமைத்தலும் – எழுத்துருவை எழுதுதல் – எழுத்துருவை மீள்நோக்கிடல் – எழுத்துருவைச் சமர்ப்பித்தல். மாணவர்கள் இவ்வெழுத்து மதிநுட்பங்களை திறனுடனும் பேண்தகைமையுடனும் பெற்றுக்கொள்ளவும் பயன்படுத்தவும் இவ்வெழுத்து மதிநுட்பங்களை நடுநிலைப்படுத்தல் வெளிப்படையாகத் தொடரப்படவேண்டும். பகுதி II இலுள்ள உத்திகளும் கற்றல் மதிநுட்பங்களும் இவ்விலக்கினை அடையத் துணைசெய்கின்றது. இன்றியமையாத குறிப்புகளைச் சுருக்கித் தரும் இரண்டு செயற்பாட்டுத் தாள்கள் 4ஆம் தரத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்குரியன.

## 4. பாரம்பரியமொழியில் எழுத்துருவை எழுதுவதற்கு தேவைப்படும் மேலதிக குறிப்புகள்

பாரம்பரியமொழி கற்பித்தலின் சிறப்பியல்புகளில் ஒன்று மாணவர்களின் பல தரப்பட்ட தன்மை மற்றும் அவர்களுட் பலர் தம்மை அச்சப்படுத்தும் தம் முதல் மொழியின் இலக்கியப் பண்புகள் தொடர்பாக மிகுதியான இடர்பாடுகளை பட்டறிகின்றனர் என்பது உண்மையாகும். இதனால் பாரம்பரியமொழியில் எழுதுவது தொடர்பாக எழும் அறைகூவல்கள் பின்வரும் கண்காணிப்புகளில் உருக்காட்டுகின்றன.

### அ) முதல்மொழி எழுத்துமுறைக்கு அறிமுகம்

குடிபெயர்ந்த நாட்டின் நெடுங்கணக்கைத் தம்முடைய தாயகத்து நெடுங்கணக்குக்கு நிகராகக் கற்ற மாணவர்களுக்கு முதலில் மிக உன்னிப்பாக அவர்களின் முதல்மொழி ஒலியன்களும் வரிவடிவங்களும் அறிமுகஞ் செய்யப்பட வேண்டும். இலத்தீன் எழுத்து முறையை அடிப்படையாகக் கொண்ட மொழிகளில் அவர்களின் பள்ளிமொழியில் இல்லாத எழுத்துக்கள் (எ.கா.ë ç I) அமைந்துள்ளன. இதனால் பெருமளவு ஆசிரியர்கள் தங்கள் பள்ளிமொழி நெடுங்கணக்கைக் கற்கும் பிள்ளைகள் குழப்பமடைவதைத் தவிர்க்க இவ்வெழுத்துகளை முதலாவது தரத்தின் முடிவில் அல்லது இரண்டாம் தரத்தின் தொடக்கத்தில் அறிமுகப்படுத்துகிறார்கள். இலத்தீன் அல்லாதனவற்றை அடிப்படையாகக் கொண்ட நெடுங்கணக்குகள் உள்ளூர் மொழியுடன் குழப்பமடையும் இடர் குறைவாகவே இருக்கும். எனினும் முதல் மொழியின் முழு நெடுங்கணக்கும் கற்றே ஆகவேண்டும்.

### ஆ) முதல் மொழியில் வேறுபட்ட சொற்கோவையை சுருக்குதலும் விரித்தலும்

பெருந்தொகையான குடியேற்ற மாணவர்களுக்குத் தங்கள் முதல்மொழியில் மட்டுப்படுத்தப்பட்ட சொற்கோவை மட்டுமே உண்டு. மேலும் அவர்களின் சொற்கோவை மற்றும் மொழித்திறன்கள் குடும்பம் தொடர்பான பொருள்களை பேச்சுமொழியிலே வெளிப்படுத்தலை உள்ளடக்கியதாகும். ஏனைய யாவற்றுக்கும் குறிப்பாக பள்ளி தொடர்பான சூழ்நிலைகள் அல்லது மிகுந்த சவால் வாய்ந்த தலைப்புகள் அவர்கள் பள்ளி மொழியை அல்லது தாம் வதியும் நாட்டு மொழியைப் பயன்படுத்துகிறார்கள். இதனால் இப்பிள்ளைகளினதும் பெரியவர்களினதுமான சொற்கோவை இரு பகுதிகளாகப் பிளவுபட்டு விரிவான இருமொழித் திறன்களை மேம்படுத்த எடுக்கும் முயற்சிகளுக்கு எதிராகச் செல்கிறது. எனவே, பாரம்பரியமொழி கற்பித்தலின் இன்றியமையாத இலக்கு எழுத்துமொழி வடிவங்களையும் உள்ளடக்கிய வேறுபட்ட சொற்கோவையை மேம்படுத்தலும் கட்டியமைத்தலுமாகும். மாணவர்கள் விரைவாகத் தமக்காக்கிக்கொள்ளும் சொற்கோவைக்கிடையிலான (பயன்படு அல்லது ஆக்கவளமுடைய சொற்கோவை) ஒரு வேறுபாட்டினை ஏற்படுத்தவேண்டும், எனவே அது ஆழமான பயிற்சிக்குள்ளாக்கப்படவேண்டும். இது பெரும்பாலும், பொதுவாகப் பயன்படுத்தப்படும் சொற்களுடன் மாணவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டிய சொற்களை – ஆனால் அவர்கள் அவற்றைப் பயன்படுத்தவேண்டும் என்பதில்லை (ஏற்றுக்கொள்ளுதல் அல்லது விளங்கிக்கொள்ளும் சொற்கோவை) – உள்ளடக்கவேண்டும். இக் கைநூலின் 14ஆம் 15ஆம் இயல்களில் வழங்கப்பட்டுள்ள மதியுரைகளும் பயிற்சிகளும் சொற்களஞ்சியக் கட்டமைப்புப் பயிற்சிகளின் இன்றியமையாமையைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

### இ) எழுத்துமொழிக்கு வழிகாட்டுதல்

மட்டுப்படுத்தப்பட்ட சொற்கோவைக்கு மேலாக பல குடிபெயர்ந்த மாணவர்களின் இன்னொரு இயல்பு என்னவெனில் அவர்களுடைய முதல் மொழித்தேர்ச்சி பெரும்பாலும் எப்போதுமே பேச்சுமொழி மாற்றுவடிவத்துடன் கட்டுப்படுத்தப்பட்டதுடன் அதன் எழுத்துமொழியில் அல்லது எழுத்து வடிவத்தில் தகுந்த ஆற்றல் இல்லாமையுமாகும். எனவே, பாரம்பரியமொழிக் கற்பித்தற் செயற்பாடுகளில் ஒன்று எழுத்துமொழியின் உன்னிப்பான அறிமுகம், அதன் தேர்ச்சி எழுத்துமொழி மற்றும் சரியாக எழுதும் மாணவர்களின் ஆற்றல் ஆகியவற்றுக்கான முன் தேவையும் திறவுகோலும் ஆகும். இவ்வறிமுகத்தின் (பள்ளி முதலாண்டில் தொடங்குவது) இன்றியமையாத கோட்பாடுகள் பின்வருவனவற்றைக் கொண்டன.

1) உன்னிப்பான கற்பித்தல்: எழுதுதலில் பிள்ளைகளின் மகிழ்ச்சியே முதன்மை இலக்கு. பெருமளவு நெறிமுறை நோக்குகளினால் அதனை விட்டுக்கொடுத்தல் முடியாது.

2) ஒப்பீட்டு மற்றும் ஆய்வு அணுகுமுறை: கற்பித்தலுக்கு முழுமையாக ஓர் ஒழுங்குமுறை அணுகலன்றி, எழுத்துமொழிக்கும் பேச்சுமொழிக்கும் இடையிலான வேறுபாடுகளை, முடியுமான வேளைகளில், மாணவர்கள் கண்டுபிடித்தலுக்கும் ஒப்பீட்டுக் கற்றலுக்கும் துணைசெய்யும் அணுகுமுறையால் தீர்த்துவைத்தல் வேண்டும்.

3) பல பொருத்தமான செயன்முறை வாய்ப்புகள்: எழுத்துமொழியில் மாணவர்களால் உள்வாங்கப்பட்ட சொற்கோவையும் மொழித் திறன்களும் பொருத்தமான எழுத்து வேலைகளால் உள்ளகப்படுத்தும் வரையும் அவை திரும்பத் திரும்ப பயிற்சிக்குட்படுத்தவேண்டும்.

### ஈ) மொழிவலுவற்ற மாணவர்களுக்கு துணைக் கட்டமைப்புகளான ஊன்றுகோல்களை வழங்குதல்

ஒவ்வொருநாள் மொழியைவிட சொற்கோவை மற்றும் முறைசார் கட்டமைப்புகளுக்கேற்ப வகுப்பறையில் பயன்படுத்தப்படும் பள்ளிமொழி மிகவும் சிக்கலானது. இவ் "வகுப்பறை மொழி", அதனுடன் தொடர்புடைய எழுத்துருத் தகைமையை (ஓர் எழுத்துருவுடன் ஆக்க நிலையிலும் பெறுநிலையிலும் ஊடாட்டமிடும் தகைமை) உள்வாங்கலென்பது அச்சமிகு செயற்பாடாகும். ஜெர்மன் வகுப்புகளிலும் ஜெர்மன் இரண்டாவது மொழி வகுப்பறைகளிலுமுள்ள மாணவர்களுக்குத் துணையாகவுள்ள மிக வெற்றியளிக்கும் அணுகுமுறையானது தற்போது பயன்படுத்தப்படும் முன்னர் குறிப்பிடப்பட்ட சார்புக்கட்டு முறையாகும். இவ்வணுகுமுறை பாரம்பரியமொழிகளைக் கற்பிப்பதற்கும் சீரிய முறையில் ஏற்றதாகும். மாணவர்கள் திசைமுகப்படுத்தப் பயன்படுத்தக்கூடிய ஒரு வகைமாதிரி வடிவத்தின் அல்லது கட்டமைப்பின் சில பகுதிகளுக்கு (எ.கா. சொற்கோவை, வாக்கியம் கட்டியமைத்தல், எழுத்துருக் கட்டமைப்பு) துணையாக சார்புக்கட்டினைப் பெறுகின்றனர். எடுத்துக்காட்டாக, மாணவர்கள் தம் சொற்களால் நிரப்பக்கூடிய "பதினொரு கவிதைகள்" (#21.1 பார்க்கவும்) என்பதிலுள்ள சுருக்க வடிவமாகவும் இது அமையலாம். இன்னொரு எடுத்துக்காட்டு, ஓர் எழுத்துருவின் சில பகுதிகளுக்குக் கட்டுமானத் தொகுதிகளை அல்லது கூறுகளை வழங்கல் (எ.கா. ஒரு படக்கதைக்கு தொடக்க வாக்கியங்களுக்குப் பொருத்தமான வினைகள்) மாணவர்கள் அவற்றை தம்முடைய எழுத்துருக்களை எழுதுவதற்குப் பன்படுத்துவர். ஒரு குறிப்பிட்ட வேலையை எவ்வாறு முடிக்கலாம் என்பதற்கு ஓர் எளிமையான எழுத்துருவுக்குக் குறிப்பிட்ட படிகளை வழங்கலாம் (எ.கா. ஒரு செய்முறை அல்லது அறிவுறுத்தல்). இவ்வாறான எல்லா இடங்களிலும் மொழி வேலைப் பகுதிகளை (எ.கா. எழுத்துரு கட்டியமைத்தல்) முடிப்பதற்கு "சார்புக்கட்டு" ப் பயன்பாடு ஓர் எழுத்துரு உருவாக்கத்தில் மாணவர்க்குள்ள சுமையினைக் குறைப்பதற்குத் துணைசெய்யும். சரியான எடுத்துக்காட்டுகளாக சொற்களையும் தொடர்களையும் தேர்வதாலும் பயன்படுத்துவதாலும், அவர்கள் தம் மொழித் திறமையை சுறுசுறுப்பாக அகல்விக்கின்றனர்.

பெரும்பாலான கற்பித்தல் பரிந்துரைகள், குறிப்பாக பகுதி III இல் (குறிப்பிட்ட சில எழுத்துப் பண்புகளை ஊக்குவிப்பதற்கான பரிந்துரைகள்), எளிமையான சார்புக்கட்டு மாற்றுகளை வழங்குகின்றன (பார்க்கவும் 14.1: சொற் பரப்புகள், 15.2: மாற்றுச் சொல் தேர்வு, 16.3: இணையான எழுத்துருக்கள்).

மேலும் தகவல்களுக்கு, https:www.uni-due.de/imperia/md/content/prodaz/scaffolding.pdf

### உ) எழுத்துப்பிழை பற்றிய பின்குறிப்புகள்

இலக்கண எழுத்துக்கூட்டு விதிகளும் சிக்கல்களும் குறைந்தளவு பகுதி முறையாகவேனும் குறிப்பிட்ட மொழி சார்ந்தனவாகையால், இவ்வெளியீட்டில் அவை விரிவாகப் பேசப்படமாட்டா. இருப்பினும், பயனுள்ள இலக்கணப் பயிற்சிக்கு பின்வருவனவற்றை ஒரு பொதுக் கோட்பாடாகப் பின்பற்றவேண்டும்:

1) அடிப்படை சொற்கோவை நோக்குநிலை: இலக்கணப்படி சரியான சொற்களைக் கையகப்படுத்தல் மற்றும் பிழைகளைத் திருத்துதல் என்பன அடிக்கடி பயன்படுத்திய சொற்களை நோக்கியதாக அமையவேண்டும். பல தடவை ஒரு சொல் பயன்படுத்தப்படுமெனில், அதன் சரியான எழுத்துக்கூட்டலை அறிதலும் பயன்படுத்தலும் இன்றியமையாததாகும்.

2) தேர்ந்தெடுத்துத் திருத்தல்: எல்லாப் பிழைகளையும் குறித்தல் முதன்மையாக ஊக்கமின்மைக்கு இட்டுச்செல்லும். மூன்று தொடக்கம் ஐந்து வரையான மிக இன்றியமையாத பிழை வகைகளை அல்லது தனிப்பட்டவர் பிழைகளைச் சுட்டிக்காட்டுதல், அவற்றைத் திருத்த வலுவுள்ள பல்பிரிவு பயிற்சியினைத் திட்டமிடல் மிகவும் பயனுடையது.

3) பயனுள்ள முன்னேற்றங்கள், நீண்டகாலப் பயிற்சி: கல்வி உளவியல் அடிப்படையில் பிழையாக எழுத்துக்கூட்டிய ஒரு சொல்லைத் திரும்பத் திரும்ப மீள் எழுதும் மரபுவழி முறையால் எவ்வித நன்மையும் இல்லை. 2 – 3 கிழமைகள் வரை சிக்கலான சொற்களை பல்வேறு தொடர்களிலே இட்டு பயிற்சி செய்தால் பயனுள்ள வலுவுள்ள பயிற்சி முன்னேற்றத்துக்கு இட்டுச்செல்லும்.

4) தன் துணையுடன் துணைசெய்தல்: அகரமுதலிகளைக் கையாளவும் பயன்படுத்தவும் முழுமையான அறிமுகம், மாணவர்கள் தம் திறனால் இக்கருவிகளை வலுவுள்ள முறையில் பயன்கொள்வதற்கான முன் தேவையாகும்.